ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவஹூ ஆவணிமீ பகுதி ௮.
Vol 4. *August & September 1927.* No. 8.

யக்ஷப்ரச்நம்.

(151-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ச) யக்ஷ:- கிம் க்ஷத்ரியாணாம் தேவத்வம் கஸ்ச தர்ம ஸதாமிவ।
கஸ்சைஷாம் மாநுஷோபாவ: கிமேஷா மஸதாமிவ॥

கிம்க்ஷத்திரியாணும் தேவத்வம் கச்சதர்ம ஸதாமிவ
கச்சைஷாம் மாநுஷோபாவ: கிமேஷா மஸதாமிவ.

(இ-ள்) க்ஷத்திரியர்களுக்குத் தெய்வத்தன்மை என்பது எது? இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மம் எது? இவர்களுக்கு மாநுஷ பாவம் எத்தன்மையது? இவர்களுள் அஸத்துக்களுடைய தர்மம் எது? (எ-ம்.)

தர்ம:- இஷ்வஸ்த்ரமேஷாம் தேவத்வம் யஜ்ஞ ஏஷாம் ஸதாமிவ।
பயம் வை மாநுஷோபாவ: பரித்யாகோ ஸதாமிவ॥

இஷ்வஸ்த்ரமேஷாம் தேவத்வம் யஜ்ஞஏஷாம் ஸதாமிவ
பயம்வை மாநுஷோபாவ: பரித்யாகோ ஸதாமிவ.

(ச) முன்பு வேதார்த்தத்தைக் கேட்டற்குரியார் இவரென்று குறிப்பிடப்பட்டதை மேலும் தெளிவாகவிளக்க இங்கு உவமை முகத்தான் உரைக்கப்படுகிறது. இந்தச் சுலோகத்தில் உவமை விரித்துரைக்காதிருக்கினும் முன் பின் வருகிற பொருட்பொருத்தங்களைநோக்கி உவமை விரித்துப் பொருளுரைக்கப்படுகிறது.

(இ-ள்.) (13) க்ஷத்திரியர்கட்குத் தெய்வத்தன்மைபாவன இஷுவும் அஸ்திரமுமாம். (14) இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மம் வேள்வியாம். (15) இவர்களுள் மாநுஷபாவமாவது பயங்கரமாம். (16) இவர்களுள் அஸத்துக்களுடைய தர்மம் துன்புற்றவரைக் கைவிடுதலாம். (எ-ம்.)

---

(13) அரசர்கட்குத் தெய்வத்தன்மையாவது வெற்றியாம். இஷு - முள்ளம்பு. அஸ்திரம் - தெய்வத்தன்மையுள்ள பாணம். இந்த இஷுவும், அஸ்திரமும் எவ்வாறு அரசன் வெற்றியடைவதற்கு இன்றியமையாத ஸாதனங்களாக இருக்கின்றனவோ அவ்வாறே பிராம்மணன் மோக்ஷமடைதற்கு வேதாத்யயனம் இன்றியமையாத ஸாதனமாயிருக்கு மென்பதை விளக்க இங்கு 'க்ஷத்திரியர்கட்குத் தெய்வத்தன்மையாவது இஷுவும் அஸ்திரமும்' என்று சொல்லப்பட்டது.

(14) க்ஷத்திரிய சிரேஷ்டர்கள் உலகுவறுமையுட்பட்டு வருந்தாமல் அதை ஸம்ரக்ஷிப்பதற்குக் காரணமான வேள்வியைப்போற்றுவது அவர்கட்குச் சிறந்த கடமையாவது போலப் பிராம்மண சிரேஷ்டர்கள் தாம் பிறவிப்பிணியுட்பட்டு வருந்தாமல் தம்மை ஸம்ரக்ஷிப்பதற்குக் காரணமான தவத்தை மேற்கொள்வது அவர்கட்குச் சிறந்த கடமையாமென்பதை அறிவுறுத்த 'இவர்களுள் ஸத்துக்களுடைய தர்மம் வேள்வியாம்' என்றுரைக்கப்பட்டது.

(15) இங்குப் பயம் என்பதற்குப் பயங்காரணமாக உண்டாகும் அபஜயத்தைப் பயப்பது என்று பொருள்கொள்ளத்தக்கது. வெற்றிகுறித்து போர்மேற்சென்ற அரசனுக்கு அபஜயத்தைப் பயப்பதாகிய தேசாத்மாபிமானத்தை ஒழித்தல் இன்றியமையாத கடமையாயிருப்பதுபோலத் தத்வஜ்ஞாநத்தை அடைய முயற்சிக்கின்ற பிராம்மணர்கட்குப் பிறவிவித்தாகிய இருவகைப்பற்றினையும் அறுப்பது முக்ய கடமையாம் என்பார் 'இவர்கட்கு மாநுஷபாவம் பயமாம்' என்றார்.

(16) புகழையும், வெற்றியையும் விரும்பிய க்ஷத்திரிய சிரேஷ்டர்கள் துன்புற்றவர்களைக்கைவிடுவதாகிய அஸத்துக்களுடைய தர்மத்தை மேற்கொண்டொழுகுதல் அவர்கட்குக் கூடாததுபோல ஸாதனமான ஆத்மஜ்ஞாநத்தைப்பெறவிரும்பிய பிராம்மண சிரேஷ்டர்கள் பரிவாதமாகிய அஸத்துக்களுடைய தர்மத்தை மேற்கொண்டொழுகுதல் அவர்கட்குக் கூடாததாம் என்பதை வற்புறுத்த 'இவர்களுள் அஸத்துக்களுடைய தர்மம் துன்புற்றவரைக் கைவிடுதலாம்' என்றுரைக்கப்பட்டது.

(ரு) யஜு:- 𑌕𑌿𑌮𑍇𑌕𑌂 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌂 𑌸𑌾𑌮𑌕𑌿𑌮𑍇𑌕𑌂 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌂 𑌯𑌜𑍁𑌃।
𑌕𑌾𑌸𑍍𑌵𑌿𑌦𑍇𑌷𑌾𑌂 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌂 𑌕𑌾𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌨𑌾𑌤𑌿
𑌵𑌰𑍍𑌤𑌤𑍇॥

கிமேகம் யஞ்ஜியம் ஸாமகிமேகம் யஞ்ஜியம் யஜு:
காசைஷாம் வ்ருணுதே யஜ்ஞம் காம் யஜ்ஞோ நாதி
வர்த்ததே.

தர்ம:- 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌂 𑌸𑌾𑌮 𑌮𑌨𑍋 𑌵𑍈 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌂 𑌯𑌜𑍁𑌃
𑌋𑌗𑍇𑌕𑌾 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 𑌯𑌜𑍍𑌞𑌿𑌯𑌂 𑌤𑌾𑌂𑌯𑌜𑍍𑌞𑍋 𑌨𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇॥

ப்ராணோவை யஜ்ஞியம் ஸாம மநோவை யஞ்ஜியம் யஜு:
ரிக்ஏகா வ்ருணுதே யஜ்ஞயம் தாம்யஜ்ஞோ நாதிவர்த்ததே.

(இ-ள்) (17) யஜ்ஞஸம்பந்தமான முக்ய ஸாமம் ப்ராணனும்.

(ஞி) மேலும் வேதார்த்தங்களைக்கேட்பவர்க்குரிய சில திருஷ்ட ஸாதனங்கள் கூறப்படுகின்றன.

(17) இங்கு யஜ்ஞம் என்றது ஜ்ஞாந யஜ்ஞத்தை. யஜ்ஞமாவது:— வேதத்திற் கூறப்பட்ட தர்சபூர்ணமாஸம் முதலிய யாகங்களாம். அவை பெரும்பாலும் ஹோதா, உத்காதா, அத்வர்யு, ப்ரஹ்மா என்ற ரித்விக்குக்களைக்கொண்டே நடைபெறத் தக்கதாயிருக்கும். அவர்களுள் ஹோதா என்பவன் அந்தந்த தேவதைக்குரிய மந்த்ரங்களைச்சொல்லி அவியை (தேவருணவை) அக்னியில் ஹோமம் செய்யத்தக்கவனாவான். பெரும்பாலும் அவன் சொல்லுகிற மந்த்ரங்களெல்லாம் ரிக்வேதத்திற் கூறப்பெற்றுள்ளனவாதலால் அவனுக்கு ரிக்வேதம் இன்றியமையாததாகும். உத்காதா என்பவன் அவிபெற்ற ஒவ்வொரு தேவதையையும் அவரவர்க்குரிய ஸ்துதிரூபமான ஸாமங்களைக் கானஞ்செய்து அவர்களை மகிழ்விப்பான். அந்தக் கானங்களெல்லாம் ஸாமவேதத்தைச் சேர்ந்தனவாதலால் அவனுக்கு ஸாமவேதம், இன்றியமையாததாம். அத்வர்யு என்பவன் யஜ்ஞாரம்பகாலமுதல் முடியும் வரையிலுள்ள ஒவ்வொரு கார்யத்திற்கு வேண்டும் ஸாதனங்களை வித்ஞ்செய்து யஜ்ஞத்தை முறையாக நடத்துவிப்பான். இவனது கடமைகளெல்லாம் பெரும்பாலும் யஜுர்வேதத்திற் கூறப்பட்டிருப்பதால் இவனுக்கு யஜுர்வேதம் இன்றியமையாததாகும். ப்ரஹ்மா என்பவன் கர்மஸாக்ஷியாய் முந்திய மூவரும் செய்யும் கார்யங்கள் ஒவ்வொன்றும் தவறாமல் கவனித்து வருதற்குரியவனாவான். ஆகையால் இவனுக்கு மூன்று வேதங்களும் இன்றியமையாதனவாகும். ஆகவே மூன்று வேதமின்றி யஜ்ஞம் சிறிதும் நடைபெருதென்பது அறியத்தக்கது.

ஜ்ஞாந யஜ்ஞமாவது:—யஜ்ஞ கர்த்தாவானவன் ரித்விக்களையும், வேதங்களையுந் துணையாகக்கொண்டு யஜ்ஞத்தை நிறைவேற்றுவதுபோல முமுக்ஷுவானவன் "𑌮𑌨𑍋𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌕𑍁𑌰𑍁𑌤" "மநோவாசம் ப்ராணந்தாங்யாத்மநே குருத" (ஆத்மாவானவன்மனோவாக்கு ப்ராணன்

(18) யஜ்ஞஸம்பந்தமான முக்ய யஜுஸ் மனஸாம். (19) ரிக் ஒன்றே யஜ்ஞத்தைத் தனக்கு உரியதாக்கிக்கொள்கிறது. (20) அந்த ரிக்கை யஜ்ஞம் அதிக்கிறமிப்பதில்லை.

தொடரும்.

களாகிய கரணங்களை ஜ்ஞாநத்தின்பொருட்டு உபயோகிக்கவேண்டும்.) என்று வேதம் கூறுவதாலும் "வாக்கு மனம் ப்ராணன் என்ற மூன்றும் ரிக் யஜுஸ் ஸாமவேதங்களாகும்" (ப்ருஹதாரண்யம் அத் 1, பிரா 5) என்று உபநிஷத்கூறுவதாலும் ப்ராணன் முதலிய கரணங்களைத் துணையாகக் கொண்டு ஆத்மஜ்ஞாநத்தைச் சம்பாதித்துக்கொள்வதாம்.

யஜ்ஞம் நடைபெறுவதற்கு ஸாமவேதம் இன்றியமையாததாயிருப்பது போல ஜ்ஞாநயஜ்ஞம் நடைபெறுவதற்கு ப்ராணன் இன்றியமையாததாயிருப்பதால் இங்கு "யஜ்ஞஸம்பந்தமான ஸாமம் ப்ராணன்" என்று சொல்லப்பட்டது.

"ஆத்மயஜ்ஞத்தில் ப்ராணன் உத்கீதமந்த்ரத்தைக் கானஞ்செய்து அஸாத்விக தத்வங்களாகிய அஸுரர்களைத் தொலைத்து, ஸாத்விக தத்வங்களாகிய ஸுரர்களை மகிழ்வித்தது" (ப்ர்ஹதாரண்யகம் அத் 1 பிரா 3) என்றும், "ப்ராணாத்காதா" "ப்ராணுத்காதா" என்றும் உபநிஷத்துக்களில் கூறப்பெற்றுள்ளனவும் இங்கறியத்தக்கனவாம்.

(18) யஜுஸ் யஜ்ஞத்திற்கு இன்றியமையாததாயிருப்பதுபோல மனமானது ஜ்ஞாநயஜ்ஞத்திற்கு இன்றியமையாததாயிருப்பதால் 'யஜ்ஞஸம்பந்தமான யஜுஸ் மனஸாம்' என்றுரைக்கப்பட்டது.

(19) இங்கு ரிக் என்ற சொற்கு ரிக்வேதமந்த்ரமென்றும் வாக்கு (வாக்கு வடிவமான உபநிஷத்து) என்றும் பொருள் கொள்ளத்தக்கது. யஜ்ஞத்திற்குஸாதனமான மூன்றுவேதங்களுள்ளும் ரிக் (மந்த்ரம்) அந்தரங்கமான ஸாதனமாயிருப்பதால் 'ரிக் ஒன்றே யஜ்ஞத்தைத் தனக்குரியதாக்கிக் கொள்கிறது' என்றுரைக்கப்பட்டது.

(20) யஜ்ஞத்திற்கு ஸாதனங்கள் பலவாயினும் அது மந்த்ரமின்றிச் செல்லாததுபோல வாக்கின்றிச் சிறிதும் ஜ்ஞாநம் நிகழாததால் 'யஜ்ஞயம் ரிக்கை அதிக்ரமிப்பதில்லை' என்று சொல்லப்பட்டது. "இதமந்தம் தம: க்ருத்ஸ்நம் ஜாயேத புவநத்ரயம், யதிசப்தாஹ்வயம் ஜ்யோதிராஸம்ஸாரம் நதீப்யதே" "இதமந்தம் தம: க்ருத்ஸ்நம் ஜாயேத புவநத்ரயம், யதிசப்தாஹ்வயம் ஜ்யோதிராஸம்ஸாரம் நதீப்யதே" என்பதாலும் வாக்கின் பெருமை யறியலாகும். இதனால் ப்ராணன், வாக்கு, மனஸ்ஸு என்ற இவை வேதார்த்தங்களைக் கேட்பவர்க்குரிய த்ருஷ்ட ஸாதனங்களாகும் என்பது பெறப்படும்.

ஸ்ரீ:

ஆலயம்.

ஆலயம் ஸாத்யாலயம் என்றும், ஸாதனலயம் என்றும் இருதிறப்படும். இவற்றுள் ஸாத்யாலயமாவது:— அன்பரது உள்ளக்கமலமாம். "பனிக்கடலிற் பள்ளிகோளைப்பழகவிட்டு ஓடிவந்தென், மனக்கடலில் வாழவல்லமாயமணாளநம்பி" என்றும், "தலசயனத்துள்ளும் என்னெஞ்சத்துள்ளுமுறைவாரை" என்றும், "வந்தாய் என்மனம்புகுந்தாய்" என்றும், "அடியார்மனத்தாயோ" என்றும் "நின்றதுமிருந்ததுங் கிடந்ததுமென்னெஞ்சுளே" என்றும் "வெள்ளத்தான் வேங்கடத்தானேலும்கலிகன்றி, உள்ளத்தான்" என்றும் அருளிச்செய்தவற்றை நோக்குமிடத்து அன்பரது உள்ளக்கமலமே ஸாத்யாலயமென்பதறியலாகும்.

"மார்வமென்பதோர்கோயிலமைத்துமாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்குஅரவதண்டத்திலுய்யலுமாமே"

என்றபடி மார்பு என்கிற ஒப்பற்ற கோயிலை அமைத்து அதில் மாதவனென்கிற தெய்வத்தைப் பிரதிஷ்டைசெய்து அன்பாகிற ஒப்பற்றபுஷ்பத்தை அவ்வெம்பெருமானது திருவடிகளில் ஸமர்ப்பிக்க வல்லவர்கட்கு யமதூதரால் நேரிடுகிற தண்டனையினின்றும் விலகுதலும் கூடும் என்று பெரியாழ்வார் ஸம்சாரிகளைநோக்கி உள்ளக்கமலத்தில் எம்பெருமானைப் பிரதிஷ்டைசெய்து வழிபடுமுறையை உபதேசித்ததும் இங்கறியத்தக்கது. மேலும்,

𑌇𑌷𑍍𑌟𑌾𑌵𑌾𑌸𑌤𑌨𑍁𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌧𑌾 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿 𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑌕𑍍𑌤𑌮𑌾𑌂𑌸𑌾𑌦𑌿𑌭𑌿𑌃।
𑌜𑍍𑌞𑍇𑌯𑍈𑌕𑌾𑌮𑍁𑌨𑌿𑌧𑌾𑌰𑌣𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑌸𑍌𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌪𑌰𑌾।
𑌤𑌾𑌂𑌯𑍁𑌷𑍍𑌮𑌦𑍍𑌵𑌸𑌤𑌿𑌂 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌰𑌮𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌪𑌤𑍇 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃
𑌦𑍇𑌹𑌂𑌤𑍍𑌵𑌂𑌵𑌰𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌮𑌿𑌮𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌸𑍍𑌪𑌦𑌂𑌦𑍇𑌹𑌿𑌮𑍇॥

இஷ்டாவாஸதநுர்த்விதா ப்ரபவதி த்வக் ரக்த மாம் ஸாதிபி:
ஜ்ஞேயைகாமுநிதாரணாஸ்பதமஸௌப்ரஹ்மாண்டதுல்யாபரா
தாம்யுஷ்மத்வஸதிம் வதந்தி வரமாம் லக்ஷ்மீபதே யோகிந:
தேஹந்தம்வரபாரமார்த்திகமிமம் ஜ்ஞாநாஸ்பதம்தேஹிமே.

இதன் பொருளாவது:— ஏ லக்ஷ்மீநாயகனே! இந்த உலகத்தின்கண் வ்யாபித்தருளிய தேவரீருக்கு இஷ்டமான வாஸஸ்தானமாகிய இந்த (நர) சரீரமானது இரண்டுவகையாக விருக்கும். இவற்றுள் த்வக், ரக்தம், மாம்ஸம், மேதை, மஜ்ஜை, அஸ்தி, சுக்லம் முதலியவகைகளால் காணப்படும் இந்த சரீரம் ஒன்று. மற்றொன்று முனிசிரேஷ்டர்களின் த்யானத்திற்கு இருப்பிடமாயும் ப்ரஹ்மாண்டத்திற்கு ஒப்பாயும் விளங்கத்தக்கதாம். இங்ஙனம் விளங்குகின்ற முனீந்திராதுசரீரமே தேவரீருக்கு முக்யவாஸஸ்தானமாகும்என்று பெரியோர் கூறுகின்றனர். பாரமார்த்திக ஜ்ஞானத்திற்கு ஆஸ்பதமாய் விளங்கும் அந்தப் பாரமார்த்திக தேகத்தை அடியேனுக்குக் கிருபைசெய்வீராக; என்பதாம். என்பதனாலும்

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑌙𑍍𑌗𑌸𑌾𑌤𑍍𑌯𑌸𑌤𑌨𑍇𑌯𑌂 𑌭𑍋𑌗𑌮𑌾𑌪𑍍𑌨𑍋𑌷𑌿𑌤𑌂
𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑍍𑌯 𑌸𑍍𑌵𑌵𑌶𑍀𑌕𑌰𑍋𑌷𑌿 𑌹𑌿 𑌜𑌨𑌾𑌨𑌰𑍍𑌚𑌾𑌗𑍃𑌹𑍇 𑌸𑌾𑌧𑌨𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌸𑌜𑍍𑌜𑌨𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌂 𑌫𑌲𑌦𑍋 𑌨𑍃𑌣𑌾𑌂 𑌪𑍁𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌸𑌦𑌾
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑍇𑌷𑌵𑌿𑌹𑍀𑌨𑌭𑌕𑍍𑌤𑌮𑌮𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌽𑌵 𑌮𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌪𑌤𑍇 ॥

ஸ்ரீமத்ப்ரஹ்மவிதங்கஸாத்யஸதநேயம்போகமாப்நோஷிதம்
ஸந்தர்ச்யஸ்வவசீகரோஷிஹிஜடாநர்ச்சாக்ருஹேஸாதநே
தஸ்மிந்ஸஜ்ஜநவித்விஷாம்பலதோந்ருணாம்புநஸ்த்வம்ஸதா
தஸ்மாத்வேஷவிஹீநபக்தமமலம்க்ருத்வாவமாம் ஸ்ரீபதே.

இதன்பொருளாவது:— ஏ ஸ்ரீய:பதியே! சிறப்புடைய பிரம்மவித்துக்களின் சரீரமாகிய (ஹ்ருதயகமல) ஸாத்பாலயத்தில் இருந்துகொண்டு எந்தப்போகத்தைத் தேவரீர் அநுபவிக்கின்றீரோ அந்தப் போகத்தைத் தேவரீருக்கு ஸாதனாலயமாகிற அர்ச்சாலயத்திற்காட்டி (எம்போன்ற) அறிவிலிகளை வசீகரித்துக்கொள்ளுகிறீர்; அந்த அர்ச்சாவதாரமாகிய ஸாதனாலயத்திலுள்ள தேவரீர், ஸாத்யாலயமாய் விளங்குகிற பெரியோர்களைப் பழித்துத் தேவரீருடைய அர்ச்சையில் சரணம்புகுகிறவர்கட்கு எப்போதும் அருள்புரிகின்றதில்லை என்று அறிஞர் கூறுவர். ஆகையால் அவர்களிடத்தில் த்வேஷமில்லாதவனைப் அர்ச்சாவதாரத்திற் பற்றுள்ள குற்ற மற்ற

பக்தனாகச்செய்து அடியேனைக் காத்தருளவேண்டும்; என்பதாம். என்பதனாலும் அன்பரது உள்ளக்கமலமே ஸாத்யாலயமென்பது பெறப்பட்டது.

ஸாதனாலயமாவது:— ஸர்வேசுவரன் சேதனர்களை வசீகரித்துத் தன் திருவடிகளில் சேர்த்துக்கொள்வதற்காக எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதாரமாம். "நின்றதெந்தையூரகத்திருந்த தெந்தைபாடகத்து, அன்று வெஃகணைக்கிடந்த தென்னிலாதமுன்னெலாம்" என்று திருமழிசைப்பிரான் எம்பெருமானை நோக்கித் 'தேவரீர் என்னை வசீகரிப்பதற்காகத் திருவூரகம் முதலிய திவ்யதேசங்களில் எழுந்தருளியிருந்தீர்' என்று அருளிச்செய்ததினாலும் அர்ச்சையே ஸாதனாலயமென்பதறியலாம்.

இனி ஸாதனாலயமாகிய அர்ச்சை எழுந்தருளியிருப்பதற்குறைவிடமாகிய விமான, மண்டப, ப்ராகார, கோபுர முதலிய அங்கங்களையுடைய கோயிலின் இயல்புகளும் இங்குரைக்கப்படும்.

𑌶𑍇𑌷𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌧𑌰𑌶𑍇𑌖𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌭𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰 𑌸𑌦𑍍𑌗𑍋𑌪𑍁𑌰
𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌮𑌣𑍍𑌡𑌪𑌕𑍇𑌤𑍁𑌪𑌾𑌕𑌨𑌿𑌲𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌕𑌾𑌲𑌯𑌾𑌦𑍀𑌨𑍍𑌪𑍁𑌨𑌃 ।
𑌪𑍂𑌜𑌾𑌦𑍀𑌪𑌨𑌿𑌵𑍇𑌦𑌨𑍋𑌤𑍍𑌸𑌵 𑌮𑌹𑌾𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌨𑍃𑌤𑍍𑌯𑌂𑌤𑌥𑌾
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍀𑌤𑌿𑌵𑌦𑌨𑍍𑌤𑌿𑌯𑍋𑌗𑌿𑌨𑌿𑌕𑌰𑌾𑌸𑍍𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌾𑌸𑍍𑌸𑌾𑌧𑌵𑌃 ॥

சேஷக்ஷ்மாதரசேகயேந்த்ர பவத: ப்ரகார ஸத்கோபுர
க்ரீடாமண்டபகேதுபாகநிலயாந்யாகாலயாதீந்புந:
பூஜாதீபநிவேதநோத்ஸவ மஹாவாத்யாநிந்ருத்யம்ததா
த்த்வாநீதிவதந்தியோகிநிகராஸ்ஸத்வாத்மகாஸ்ஸாதவ: *

---

* திருவுடையடியார்தேகமேயொத்துத்
திகழ்திருக்கோயிலின்மதிலும்
அரியசீர்கொர்ப்பமந்திரமர்த்த
மண்டவமடிசிலார்மடமும்
உரியமற்றளவாமனைத்துமேதத்வ
வுருவகமென்பராலெளியேன்
கருமுகிற்கோலவடதிருவரையாய்
கருத்தினிலுணரவந்தருளே.

இதன்பொருளாவது:—சேஷகிரியாகிய திருவேங்கடமலைக்குத் தலைவரே! தேவரீருடைய கோயிலுக்கு உறுப்புக்களாக ஏற்பட்டிருக்கிற திருமதில், கோபுரம், மஹாமண்டபம், அர்த்தமண்டபம், சுகநாசி, அந்தராளம், கெர்ப்பக்ருஹம், திருமடப்பள்ளி, யாகசாலை முதலியனவும், திருவாராதனமும், திருவிளக்கும், அமுதுசெய்தலும், திருவிழாக்களும், மேளதாள முதலான வாத்ய விசேஷமும், தாஸிகளால் நடத்தப்படும் நடனவிசேஷமும் சத்வவடிவினர்களாகிய யோகீந்திரர்கள் தத்வங்களென்று சொல்லுகிறார்கள்; என்பதாம்.

யோகீந்திரர்கள், அடியார்களின் சரீர அமைப்புப்போல ஆலயமமைக்கப்பெற்றுள்ளன வென்பர்கள். அதுவருமாறு:— எம்பெருமானெழுந்தருளியிருக்கிற மூலஸ்தானம் சிரஸாம். அந்த மூலஸ்தானத்திற்கு அடுத்துள்ளதாகிய அந்தராளமென்பது முகமாம். அதற்கடுத்த அர்த்தமண்டபம் என்பது கண்டஸ்தானமாம். அதற்கடுத்தமண்டபம் மார்பும் தோளுங்கூடிய ஸ்தானங்களாம். இவற்றைச்சூழ்ந்துள்ள ப்ராகாரமென்பது துடையும் முழந்தாள்களுமாம். கோபுரம் பாதமாம். இவ்விதமாக ஆலயங்கள் அடியார்களின் சரீராகாரமாக அமைக்கப்பட்டுள்ளமை காணலாம். இந்தச் சரீரத்தில் எம்பெருமான் உகந்தெழுந்தருளியிருப்பதுபோல ஆலயங்களிலும் உகந்தெழுந்தருளியிருக்கிறான்.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு ஸ்ரீமது உபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(163-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவனுக்குவருகிற போகம், பகவத் போகாதிசயாதாயகமாய்க் கொண்டு உத்தேச்யமாகும் என்னும் அர்த்தத்தை, ஆழ்வார் "தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்றருளிச்செய்தார். அதில் தனக்கேயாக என்கிற ஏவகாரத்தால் ஸ்வபோகம் வ்யாவர்த்திக்கப் படுகிறது. அப்படியே ஆண்டாளும், "மற்றநங்காமங்கள்மாற்று" என்று ஸ்வபோகத்தில் அந்வயமில்லாமையை வெளியிட்டாள்.

இப்படியே த்வயத்தில் உத்தரகண்டத்திலும், நம: சப்தத்தால் இந்த அர்த்தமேற்படுகிறது. இப்படி, ஸர்வப்ரமாணமூலபூதமான திருமந்த்ரத்தினுடைய அர்த்தமாக பரார்த்தாநுபவ கைங்கர்யங்களுடையபடி நிரூபிக்கப்பட்டது.

இந்த பரார்த்தாநுபவ கைங்கர்யங்களில் உபாஸகர்களுக்கும் ஸ்வகதஸ்வீகாரநிஷ்டர்களுக்கும் அந்வயமில்லை. அதில் உபாஸகர்கள் மந்த்ரத்தினுடைய ஸ்தூலயோஜனையைப்பற்றிப் போகிறவர்களாகையாலே அந்வயமில்லை. ஸ்வகதஸ்வீகாரநிஷ்டர்களும் அப்படியே ஸ்தூலயோஜநாநிஷ்டர்களாகையாலே அவர்களுக்கும் அந்வயமில்லை.

அநுபாயப்ரபத்திநிஷ்டர்கள் திருமந்த்ரத்தினுடைய ஸூக்ஷ்மயோஜநாநிஷ்டர்களாயும், த்வயத்தையே ப்ரபத்யநுஷ்டாந மந்த்ரமாக அவலம்பித்தவர்களாகையாலும், தத்க்ரதுந்யாயத்தாலே பலதசையில் பரார்த்தாநுபவ கைங்கர்யங்கள் பலமாக ஏற்படுகிறது.

உபாஸகர்களும் ஸ்வகதஸ்வீகாரநிஷ்டர்களும் இப்படி இல்லாமையால் தத்க்ரதுந்யாயத்தாலே ஸ்வார்த்தாநுபவ பரார்த்தகைங்கர்யங்களை பலமாக அடைகிறார்கள்.

தத்க்ருது ந்யாயம் அயோகவ்யவச்சேதபரமாயிருந்தாலும், உபாஸிதவிருத்தாகாரப்ராப்தி கூடாமையால் இந்த அதிகாரிகளுக்கு உபாயாநுஷ்டான தெசையில் ஸ்வார்த்தாநுபவ கைங்கர்யங்களே பலமாக உத்தேசித்திருப்பதால் இதற்கு விருத்தமான பராநுபவ கைங்கர்ய ப்ராப்தி கூடாது.

ஆனால், கத்யவ்யாக்யானத்தில், பெரியவாச்சான்பிள்ளை நித்ய விபூதியினுடைய நிருபணாவசரத்தில், "போக்யபோகோபகரண" என்கிறவிடத்தில் நித்யவிபூதியில் ஸ்வார்த்தபோகமேயில்லாமையால் போக்த்ருநிர்த்தேசமில்லையென்றும், லீலாவிபூதியில், "போக்த்ரு போகோபகரண" என்றிருப்பதால் ஸ்வார்த்தபோக்தாக்களைச் சொல்லுகிறதென்றும் அருளிச்செய்திருப்பதால் நித்யவிபூதியில் பலபேதமில்லை என்று ஏற்படுவது கூடும்படி எங்ஙனே என்னில்? லீலாவிபூதியில் ஸ்வார்த்தபோகமே ப்ரதானமாயிருப்பதால் அப்படி நித்யவிபூதியில் ஸ்வார்த்தபோகம் ப்ரதாநமாயில்லாமையைப்பற்றி அருளிச்செய்ததாகையாலே அநுபபத்தியில்லை. நித்யவிபூதியில் ஸ்வார்த்தபோகம் அப்ரதாநமாயுள்ள அதிகாரிகளும், ஸ்வபோகமும் பரார்த்தமாயிருக்கும் அதிகாரிகளும், உண்டென்பதற்கு அநுபபத்தியில்லை.

ஸ்ரீவசனபூஷணத்துக்கு திருவாய்மொழிப்பிள்ளை அருளிச்செய்த வ்யாக்யானத்திலும் பலபேதமில்லை என்பதற்கு தாத்பர்யம்; அநுபவகைங்கர்யரூப பலபேதமில்லை என்பதே; மற்றப்படி பரார்த்தஸ்வார்த்தபேதமில்லை என்பதில் தாத்பர்யமில்லை.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷணபங்க்தியில் உத்தேச்யபேதத்தை நிருபித்திருக்கிறபடியால், அந்த உத்தேசாநுகுணமாகவே, பல ஸித்தி சொல்லவேண்டியது ஆவசியகமாகையாலே பலபேதமுண்டென்பது ஸ்பஷ்டம்.

இப்படியே மணவாளமாமுனிகள் வ்யாக்யானத்திலும் ஏற்படுகிறது. முக்தியில் பலபேதமில்லையென்பது, கைவல்யத்தை முக்தியாகவும், தத்க்ருது ந்யாயத்திற்கு அந்யயோகவ்யவச்சேதமே அர்த்தமென்றும், சொல்லுகிற ஸித்தாந்தத்தில் கூடாததலால் அந்த உபபத்திகளைக்கொண்டு அநுபவ கைங்கர்யங்களில், பரார்த்ததை

ஸ்வார்த்ததை உண்டென்பது ஸித்தம். இப்படி, சில ஆசார்யர்களுடைய நிர்வாஹம்.

அன்றிக்கே, "இவற்றை தர்மமென்கிறது ப்ரமித்த அர்ஜுனன் கருத்தாலே" என்று லோகதேசிகன் அருளிச்செய்திருப்பதால் பக்தி முதலானவைகளுக்கு வாஸ்தவமான உபாயத்வமில்லை; அந்த உபாயத்வம் ஈசுவரனுக்கேயுள்ளது. பக்தியில் வருகிற உபாயத்வ புத்தி ப்ராந்திரூபை யென்றேற்படுகிறபடியால் 'நாதத்வஜ்ஞாநாந்முக்தி:" "நாதத்வஜ்ஞாநாந்முக்தி:" என்பதால் தத்வஜ்ஞாநமில்லாதவர்களுக்கு முக்தியில்லை என்று சொல்லியிருப்பதால், உபாயத்வ புத்யாபக்தியை அநுஷ்டித்தவர்களுக்கு மோக்ஷமில்லையென்பது ப்ரமாண விருத்தமாகையால் உபாஸநாதசையில் பக்தியை உபாய புத்யா அநுஷ்டித்தபோதிலும் அநந்தரம் தத்வஜ்ஞாநம் பிறந்தே மோக்ஷம்கிடைக்கிறதென்றேகொள்ளவேணும். அப்பொழுது பல பேதம்ஏற்படமாட்டாது. ஆதலால் ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானத்தில் உத்தேசியம் என்பது ப்ரதிபத்திமாத்ரத்தை அவலம்பித்துச் சொல்லியவிஷயம் என்று சில ஆசார்யர்களுடைய அபிப்ராயம்.

அப்படியேற்பட்டால் கைவல்யார்த்திக்கும் உபாஸநாதசையில் ஸ்வஸ்வரூபத்தில் போக்யதா புத்தியிருந்தபோதிலும் நாதத்வஜ்ஞாநாந்முக்தி:" என்றிருப்பதால் பின்பு யதாவஸ்தித உபாஸநமேற்பட்டு ப்ருஹ்மாநுபவமும் ஏற்படலாம்.

அப்படியிருக்க, கைவல்யத்தில் பலபேத நிரூபணத்தில் ப்ரயாஸமே வ்யர்த்தம். இவைகளில் ஸ்வாரஸ்யாஸ்வாரஸ்யங்களை அறிவுடையோராராயக்கடவது.

இப்படி இந்த பாரார்த்தபோகத்தை சுருதியில் ப்ரதிபாதித்திருக்கிறது. அதாவது "ஹாவு ஹாவு ஹாவு" "அஹமந்நமஹமந்நமஹமந்நம்" "அஹமந்நாதோ3ஹமந்நாதோ3ஹமந்நாத:", என்கிற சுருதியில் அந்நம் என்று தன்னுடைய போக்யதையைச்சொல்லி, அந்நாதனை தான் அந்நமென்று சொல்லுவதால் அந்த அந்நாதத்வம் அந்நத்வோபயோகியாக ஏற்படுகிறது.

இப்படியே, "படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேன்" என்கிற இடத்தில், 'படியாய்க்கிடந்து' என்று அசித்வத்பாரதந்த்ரியத்தையும் 'பவளவாய்காண்பேன்' என்பதால் ஸ்வாநுபவஜநித பகவந்முகோல்லாஸாநுபவத்தையும் சொல்லுகிறபடியால் சைதந்ய கார்யமான போகத்தையும் சொல்லுகிறது.

இப்படி, இந்த மந்த்ரார்த்தத்தை அஷ்டசுலோகியில் பட்டர் '𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿' என்கிற சுலோகத்தாலே அருளிச்செய்தார்; அந்த சுலோகமாவது:— '𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇𑌨 𑌨𑌮𑌸𑌾 𑌪𑍁𑌂𑌸𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌗𑌤𑌿𑌃 𑌗𑌮𑍍𑌯𑌂 𑌶𑌿𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌨 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌪𑌿 𑌸𑍍𑌥𑌾𑌨𑌤𑌃। 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂 𑌨𑌿𑌜𑌰𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌮𑍁𑌚𑌿𑌤𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌚𑌿𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵𑍇𑌤𑌿 𑌹𑌰𑍇𑌰𑍍𑌵𑌿𑌵𑌿𑌚𑍍𑌯 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌾𑌰𑍍𑌹𑌂 𑌤𑌤𑌃", "மந்த்ரப்ரஹ்மணி மத்யமேந நமஸாபும்ஸஸ்ஸ்வரூபம்கதி: கம்யம்சிக்ஷிதமீக்ஷிதேநபுரத: ப:சாததஸ்தாநத: ஸ்வாதந்த்ர்யம் நிஜரக்ஷணம் ஸமுசிதாவ்ருத்தி:ச நாந்யோசிதா தஸ்யைவேதிஹரே: விவிச்யகதிதம் ஸ்வஸ்யாபிநார்ஹம் தத:" என்பதாம். இதன் அர்த்தம்:—

மந்த்ரப்ரஹ்மணி என்பதால் மந்த்ரசிரேஷ்டமான திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. அதில் மத்யமமானநம: சப்தத்தால் (பும்ஸ:) சேதநனுடைய ஸ்வரூபம் ஸ்வீயமான ஆகாரமான பகவத்போகார்த்த ப்ரவ்ருத்தியோக்யத்வமும், 'கதி:' என்பதினால் நாராயணசப்தத்தில் 'ஈயதே' கரணவ்யுத்பத்தியால் ஏற்பட்ட உபாயமும், கம்யசப்தத்தால், வ்யக்தசதுர்த்தியினுடைய வ்யங்க்யார்த்தமான பகவத் பிரீதிரூபமானபலமும், விவக்ஷிதம். 'சிக்ஷிதம்' என்பதாலே நபும்ஸக ஏகவாக்யவிவக்ஷையால் இந்த மூன்றையும் சொல்லுகிறது; 'ஈக்ஷிதேநபுரத:' என்பதால், பூர்வவாக்யமான ப்ரணவத்திலும் உத்தரவாக்யமான நாராயணபதத்திலும் ஸ்வவாக்யத்திலும் வாக்யைகவாக்யமாக பர்யாலோசநம் பண்ணுகையாலே, "ஸ்வாதந்த்ரியம்":— ஸ்வாதீநத்வம், அதாவது முன்சொல்லப்பட்ட ஸ்வரூபசிக்ஷாபலிதமான அர்த்தத்தையே விவக்ஷிக்க வேண்டியபடியால் ஸ்வபோகார்த்தப்ரவ்ருத்யர்ஹத்வம் விவக்ஷிதம்.

"ஸமுசிதாவ்ருத்தி:—" ஸ்வார்த்தவ்ருத்தி அநுசிதை, பாரார்த்தையானவ்ருத்தி உசிதை, கேவலபாரார்த்தவ்ருத்தி ஸமுசிதை. சேதனனுக்கு ஸ்வபோகார்த்த ப்ரவ்ருத்தியைக்காட்டிலும், தேவதாந்தரபோகப்ரவ்ருத்தி, பகவத்போகார்த்த ப்ரவ்ருத்தி யோக்யதையை ஸம்பாதிக்கையாலே உசிதை. தேவதாந்தரபோகார்த்த ப்ரவ்ருத்தியைவிட்டு வருகிற பகவத்போகார்த்தப்ரவ்ருத்தி ஸமுசிதை. 'நாந்யோசிதா' அந்யோசிதையன்று. 'தஸ்யைவ' என்று 'பதிம்விச்வஸ்ய' என்று ப்ரஸித்தனான ஈசுவரனுக்கே உசிதை. 'ஹரே: விவிச்சயகதிதம்':— இப்படி ஹரியைக்குறித்துச் சொல்லப்பட்டது. 'வஸுரந்யோவிபுரஸி' என்கிற சுருதியாலும், 'அவசதா ஹம்தவாஸ்மி' என்கிற உபப்ருஹ்மணத்தாலும், ப்ரணவம் ஈசுவரனைக்குறித்துச் சொல்லுகிற உக்திரூபமாகையாலே ஹரியைக்குறித்துச்சொல்லப்பட்டதென்கிற அர்த்தம் ஏற்பட்டது. 'நாந்யோசிதா'— இன்னொருவருக்கு உசிதையன்று. 'ஸ்வஸ்யாபிநார்ஹம்தத':— தனக்கும் ஈசுவரனுக்கும் பொதுவான சேஷத்வம் கூடாது என்று அர்த்தம். ஆதலால் ஈசுவரனுக்கே சேஷமாயிருக்கை ஸ்வரூபம் என்பதாம். இப்படி அநுபவ கைங்கர்யங்களில் பாரார்த்த்யமே உத்க்ருஷ்டமென்பது ஸித்தம்.

தொடரும்.

ஸ்ரீ:

பன்மணித்திரள்.

ஆத்மகுணங்கள்.

ஆத்ம குணங்களாவன:— ஆத்மாவுக்குப் பெருமையையுண்டு பண்ணித்தரவல்ல குணங்களாம். அவை இருபது குணங்களென்று சொல்லப்படும். இவற்றைக் குறித்துக் கண்ணபிரான் கீதையில் பதின்மூன்றும் அத்யாயம் ஏழாவது சுலோகமுதல் பதின்மூன்றும் சுலோகம்வரை அருளிச்செய்ததினால் நன்கறியலாம். அவை வருமாறு:—

(1) அமாநித்யம்:— பெரியோர்களை இகழாதொழிகை, (2) அதம்பிதத்வம்:— கீர்த்தியை உத்தேசித்துத் தர்மஞ்செய்யாதொழிகை, (3) அஹிம்ஸா:— மனோவாக்குக் காயங்களால் பிறரை நலியாதிருத்தல், (4) க்ஷாந்தி:— தனக்கு அவமானஞ்செய்தவர்களிடத்தில் அபகாரமும் சிந்தியாதொழிகை, (5) ஆர்ஜவம்:— மனோவாக்குக் காயங்கள் ஏகரூபமாயிருக்கை, (அஃதாவது:— மனத்தால் நினைப்பதொன்று வாயினால் சொல்வதொன்று சரீரத்தால் செய்வதொன்றாக இல்லாதிருத்தலாம்) (6) ஆசார்யோபாஸநம்:— மந்திரோபதேசஞ்செய்த ஆசார்யனிடத்தில் தினந்தோறும் செய்யும் பணிவிடை, (7) சௌசம்:— மனம் வாக்குக் காயங்கள் தோஷமில்லாதிருத்தல், (8) ஸ்தைரியம்:— வேதாந்தத்திற் சொல்லப்பட்ட அர்த்தத்தில் கலக்கமற்றிருத்தல். (9) ஆத்மவிநிக்ரஹ:— இதர விஷயங்களில் மனஞ்செல்லாதொழிகை, (10) இந்திரியார்த்தேஷு வைராக்யம்:— சப்தாதிவிஷயாந்தரங்களின் தோஷங்களைக் காணுதலாலுண்டான நடுக்கம், (11) அனஹங்கார:— யான் எனதென்கிற அகப்புறப் பற்றொழிதல், (12) ஜன்மம்ருத்யுஜராவியாதிதுக்கதோஷாநுதரிசனம்:— ஜன்மம், மரணம், கிழத்தனம், ரோகம் என்ற இவற்றினாலும், மற்றவற்றினாலும் உண்டாகும் துக்கரூபமான தோஷத்தைத் தினந்தோறும் ஆராய்ச்சி செய்தல், (13) அஸக்தி:— விஷயாந்தரங்களில் ஆசையற்றிருத்தல், (14) புத்ரதாரக்ருஹாதிஷு அநபிஷ்வங்க:— புத்ரன் மனைவி முதலானோரிடத்தில் சாஸ்திரீயமான பகவதாராதனாதி கிரியோபயோகம் தவிர இதர பிரயோஜனத்தை விரும்பிப் பிரீதிபண்ணுதொழிகை. (அஃதாவது:— தாரபுத்ராதியர் பகவத்கைங்கர்யத்திற்கு அநுகூலர்களாகவிருக்கின்றார்கள் என்ற கருத்தினால் அவர்கள்பால் அன்புற்றிருக்க வேண்டும்; இஃதொழிய வேறு பிரயோஜனத்தைக்கருதி அவர்களிடத்தில் அன்பு செய்யாதிருப்பதாம்.) (15) இஷ்டாநிஷ்டோபபத்திஷு நித்யம் ஸமசித்தத்வம், இஷ்டாநிஷ்டங்களையடைகிற காலங்களில் விருப்பு வெறுப்புரூப மனோவிகாரமற்றிருக்கை. (16) மயிசாநந்யயோகேந பக்தி: அவ்யபிசாரிணீ:— தேவதாந்தரம் கலசாத அநந்யப்ரயோஜன பக்தி, (அஃதாவது:— இதர தெய்வத்திடத்தில் பற்றின்றிப் பிறிதோர் பிரயோஜனத்தை விரும்பாமல்

எப்பெருமானை விஷயமாகக்கொள்ளும் அன்பாம்.) (17) விவிக்த தேச ஸேவித்வம்:— ஏகாந்த தேசத்தில் வசித்தல், (18) ஜனஸம்ஸதி அரதி:— ஸம்ஸாரிகளுடைய கூட்டத்தில் விருப்பமற்றிருக்கை, (19) அத்யாத்மஜ்ஞாந நித்யத்வம்:— ஆத்ம ஸாக்ஷாத்காரத்தில் மிக்க ஆசையுடையவனாய் எப்போதும் அதிலே நிரதனாயிருக்கை, (20) தத்வஜ்ஞாநார்த்த தர்சநம்:— ஆத்ம ஸாக்ஷாத்கார ஹேதுக்களை ஆராய்தல்; என்பனவாம். "𑌏𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌯𑌦𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌥𑌾" "ஏதஜ்ஜ்ஞாநமிதிப்ரோக்தம் அஜ்ஞாநம் யததோந்யதா" என்றபடி இந்த இருபதும் ஜ்ஞாநமென்று சொல்லப்படும். இவற்றை ஒழிந்த மற்றவையெல்லாம் அஜ்ஞாநங்களேயாம். எனவே இக்குணங்களையடைதற்கு முயல்வதே அறிவுடையோரின் கடமையாகுமென்பது பெறப்படும்.

ஈசுவரவிஷயமான பேரன்புண்டாகுமாகில் இந்த ஆத்மகுணங்களெல்லா முண்டாகும். ஆகவே இந்த ஆத்மகுணங்களுண்டாவதற்கு ஈசுவர விஷயமான பேரன்பே காரணமாயிருக்குமென்றறியத்தக்கது. இதைக்குறித்து லோகதேசிகனும் "இவனுக்குப் பிறக்குமாத்ம குணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதானஹேது இந்த ப்ராவண்யம்". (பகவத்விஷயமான பிரீதி) என்று அருளிச்செய்தார். மேலும், "ஆத்மகுணங்களில் ப்ரதானம் சமமும் (அந்தக்கரணவடக்கம்) தமமும் (வெளிக்கரணவடக்கம்) இவையிரண்டு முண்டானால் ஆசார்யன் கைபுகும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே ஈசுவரன் கைபுகும்; ஈசுவரன் கைபுகுந்தவாறே "வைகுந்தமானகர் மற்றது கையதுவே" என்கிறபடியே ப்ராப்யபூமி கைபுகும்." என்றும் அருளிச்செய்தார். இதனாலும் ஆத்மகுணங்களின் பெருமை அறியலாகும்.

ஆத்மஸமர்ப்பணம்.

ஆத்மஸமர்ப்பணமாவது:— 'என்னுடைய ஆத்மஸ்வரூபமும், அதைச்சார்ந்த க்ருஹம், க்ஷேத்ரம், தனம், சுகமுதலியவையும் உனக்கே சேஷப்பட்டன; இவற்றிலெனக்கொரு அந்வயமில்லை' என்று இவற்றைப் பரமாத்மாவிடத்தில் ஸமர்ப்பிக்கையாம்.

உண்மையை ஆராயுமிடத்தில் ஆத்மவஸ்துக்களையும் அசேதந வஸ்துக்களையும் பரமாத்மா தனக்கு சரீரமாகக்கொண்டுள்ளா னாகலால் இவையெல்லாம் அவனுக்கே உரியனவாயிருக்கும். அங் ஙனமிருக்க இவற்றைத் தன்னதாகக் கருதி ஸமர்ப்பிப்பதும் கூடாத தொன்றாம். இதைப்பற்றியே லோகதேசிகனும் 'ஆத்மஸமர்ப்பணமும் ஆத்மாபகாரத்தோடொக்கும்' என்று அருளிச்செய்தார். இஃதொரு புறமிருக்க ஆத்மஸமர்ப்பணம் செய்துபோந்த அநுஷ்டானமும் பெரியோரிடத்தில் காண்கிறோம். எங்ஙனமெனின்;

† எனதாவியுள்கலந்தபெருநெல்லுதவிக்கைமாறு
எனதாவிதந்தொழிந்தேனினிமீள்வதென்பதுண்டே

---

† இப்பாட்டால் ஆழ்வார் ஆத்மஸமர்ப்பணஞ் செய்கிறாரென்பதுரைக் கப்படுகிறது. எனதாவியுள் கலந்த—கணக்கிலடங்காத காலமெல்லாம் ஸம் ஸாரத்திலே வாஸனைபண்ணிப்போந்த என்னுடைய ஆத்மவஸ்துவிலே வந்துகலந்த "நீசனே னிறையொன்றுமிலேன்" என்று தம்மைத் தாழ்மை யாகக் கருதியுள்ளாராதலால் இப்போது எம்பெருமான் தம் மாத்மவஸ்துவில் வந்துகலந்தது வஸிஷ்டன் சண்டாளனுடைய குடிசையிலே புகுவது போலிருக்கின்றதென்பார் எனதாவியுள் கலந்த என்றார். 'பெருநல்லுதவி' என்பதை உதவி, நல்லுதவி, பெருநெல்லுதவி என்று பிரித்துப் பொருள் கொள்ளத்தக்கது. உதவியாவது—உபகரிக்கையாம். நல்லுதவியாவது—ஒரு பிரயோஜனத்தை விரும்பாமல் உபகரிப்பதாம். பெருநல்லுதவியாவது-தன் பேறாக உபகரிக்கையாம். கைமாறு-பிரத்யுபகாரமாக, 'எனதாவி தந்தொழிந் தேன்' என்னுடைய ஆத்மவஸ்துவை தேவர் திருவடிகளிலே ஸமர்ப்பித் தேன் என்றார்.

ஸர்வேசுவரன்:— அழகிது! இதுதான் எத்தனை குளிக்கு நிற்கும். (அஃதா வது புஷ்ப முதலிய வாஸனை வஸ்துக்களை யணிந்ததா லுண்டாகிய வாஸனை நாலைந்து குளிப்பு வரையிலிருந்து பின்னர் நீங்குவதுபோல இந்தப் புத்திவிசேஷம் ஸ்திர மாக நிற்குமோ என்பதாம்.)

ஆழ்வார்:— 'இனிமீள்வதென்பதுண்டோ' இனிமீட்சியென்பதொன் றில்லை.

ஸர்:— நீர் யாருடைய பொருளை யாருக்குத்தந்தீர் என்பதை நன் றாய் ஆராய்ந்து பார்ப்பீர்.

ஆழ்வார்:— அடியேன் ஆராய்ந்தவிடத்தில் 'எனதாவியாவியும்நீ' என் னாத்மாவுக்கு அந்தராத்மாவாய்ப்புகுந்து நின்றதும் நீயா

எனதாவியாவியும்நீபொழிலேழுமுண்டவெந்தாய்
எனதாவியார்யானார்தந்தநீகொண்டாக்கினையே.

என்று ஆழ்வார் அருளிச்செய்தார். இதை ஆராய்ந்துபார்க்குமிடத்தில் சிஷ்டாசாரம் ப்ரபல ப்ரமாணமாதலால் ஆத்மஸமர்ப்பணங்கூடும் என்பது பெறப்படும். நம்பிள்ளை ஈட்டில் இதை நிர்ணயிக்கவந்தவிடத்தில் "ஆத்மஸமர்ப்பணம் பண்ணுவிடில் ஸர்வ முக்தி ப்ரசங்கமாம்; ஸமர்ப்பிக்கில் அவனதான வஸ்துவை அவனுக்குக் கொடுத்ததாம்; ஆனால் செய்யவடுப்பதென்னென்னில் பிராந்தி ஸமயத்தில் (மயக்கவேளையில்) ஸமர்ப்பிக்கவும் வேணும்; தெளிந்தால் 'கொடுத்தோம்' என்றிருக்கக் கடவனல்லன்; "யோஸஸெவி தஃ" "மயா ஸமர்ப்பித:" "ஈயுவாகிந்ந ஸவெயாஇம்க" அதவாகிந்ந ஸமர்ப்பயாமிதெ" என்னுமிறே" என்று அருளிச்செய்தார்.

மேலும், இந்த ஆத்ம ஸமர்ப்பணத்தைப் பக்தியைப்போல மோக்ஷஸாதநமென்றும், இதற்கு ஆநுகூல்யஸ்யஸங்கல்பம், ப்ராதி

யிருந்தாய் (அவனுக்குரிமையான வஸ்துவை நெடுநாள் நம்முடையதென்று கருதி இதை இன்று அவன் பக்கலிலே ஸமர்ப்பித்தோம்; எல்லாமறிந்தவனாகிய ஸர்வேசுவரன் என்னினைந்திருப்பானோவென்று தாம் ஆத்மஸமர்ப்பணஞ்செய்ததற்கு லஜ்ஜிக்கிறார்.)

ஸர்:— உம்முயிர்க்கும் யான் உயிராயிருக்கின்றேனென்பதை எவ்வாறறிந்தீர்?

ஆழ்வார்:— 'பொழிலேழுமுண்டவெந்தாய்' பிரளயாபத்திலே எல்லாவற்றையும் வயிற்றிலேவைத்துப் பாதுகாத்ததினால் நீயே எல்லோருக்கும் தலைவனாயிருக்கின்றாய் என்பது தோற்றுகின்றதல்லவா; மேலும் 'எனதாவியார்? யானார்?' ஸமர்ப்பிக்கப்படுகிற வஸ்து யாருடையது? ஸமர்ப்பிக்கின்ற கர்த்தா யாருடையவன்? நான் என்னாத்மாவை ஸமர்ப்பித்தேனெனக் கடவேனோ.

ஸர்:— பின்னை நீர் இப்போது கருதுவது யாது?

ஆழ்வார்:— 'தந்தநீகொண்டாக்கினையே' முன்பே இதையுண்டாக்கிய நீயே கொண்டருளினாய்.

ஸர்:— நித்ய வஸ்துவாகிய உம்மை யான் உண்டாக்குவதென்பதொன்றுண்டோ?

ஆழ்வார்:— "ஜ்வாதவனவ தவவிரு வஷாயஃ ஸத்தா" "இச்சாதஎவ தவவிச்வ பதார்த்த ஸத்தா" என்றபடி உனது நித்யேச்சையினாலன்றோ அடியேனுடைய நித்யத்வம்.

கூல்யஸ்யவர்ஜனம், ஈசுவரன் நம்மைத் தப்பாமல் ரக்ஷிப்பான் என்கிற விசுவாசம், நீயே எனக்கு ரக்ஷகனாகவேண்டுமென்கிற கோப்த்ருத்வ வரணம், என்னுடைய ரக்ஷணத்துக்கு என்பக்கலொருகை முதலில்லை என்கிற கார்ப்பண்யம் ஆகிய இவ்வைந்தும் அங்கங்களென்றும் சிலர் கூறுவர். இது பொருந்தாது. எவ்வாறெனின்; “க்ஷமிஷ்வோபாயஹீநோதோஜ ஹவேதி யாஞ்சநாமதி: ஸப்ரணாமதி:” “த்வமேவோபாயபூதோமே பவேதி ப்ரார்த்தநாமதி: சரணாகதி:” என்று நீயே எனக்கு உபாயமாகவேண்டுமென்கிற ப்ரார்த்தனரூபமானபுத்தி சரணாகதி யெனப்படும் என்கிற வசனத்தில் ‘நீயே’ என்கிற ஏகாரத்தாலே பலத்தைக்கொடுப்பவனும், நித்யனும், கர்மாதிகளைப்போல அசேதனமன்றிக்கே ஸர்வஜ்ஞனும், ஸர்வசக்தனுமிருக்கிற எம்பெருமானே உபாயமாவானென்பது பெறப்படுகிறதினால் ஆத்மஸமர்ப்பணம் உபாயமாகாதென்று கொள்ளத்தக்கது. இது நிற்க;

இந்த ஆநுகூல்யஸ்யஸங்கல்பம் முதலியவை ஆத்மஸமர்ப்பணத்திற்கு அங்கங்களாகவிருக்குமாகில் புரோடாசம் (தேவருணவு) முதலிய அங்கங்களின்றி யாகம் நிகழாததுபோல இவ்வங்கங்களின்றி ஈசுவரன் ரக்ஷிக்காதிருத்தல்வேண்டும். இவையின்றியும் ரக்ஷிக்கின்றானாகலால் இவை அங்கங்களாகமாட்டா என்பது தெளிவாம். ஆகவே ஆத்மஸமர்ப்பணம் ஸர்வமுக்தி ப்ரஸங்க பரிகாரார்த்தமாகவே செய்யத்தக்கதா மென்றறியத்தக்கது.

ஸ்ரீ:

ஆதிபரதன்.

ஆதிபரதன் பிரியவிரத வம்சத்திலோரரசனான ருஷபனுடைய குமாரன். இவன் சிலகாலம் செங்கோன்மையோடு ராஜ்யபரிபாலனஞ்செய்துகொண்டிருந்தான். இவன் ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்த காரணம்பற்றியே இவ்வருஷத்திற்கு பாரதவருஷமென்று பெயர் வழங்கலாயிற்று. இதுநிற்க, இவன் தன் மகன் ஸுமதி என்பவனிடத்தில் ராஜ்யத்தை ஒப்பிவித்துவிட்டுத் தான் தபசு செய்வதற்காக ஸாளக்கிராமம் என்ற க்ஷேத்ரம் சென்று தபசு பண்ணிக்கொண்டிருக்கையில் ஒருநாள் நடுப்பகலில் மஹாநதிதீரத்

திற்குச்சென்று மாத்பாஹ்நிக ஸ்நானம்செய்து நித்ய கர்மத்தை முடித்துக்கொண்டு நின்றவளவில், அவ்விடத்தில் ஒரு கர்ப்பிணியான மான் நீரருந்தவந்தது. அப்பொழுது ஒருசிம்மம் கர்ச்சித்தது. அதைக்கேட்ட மான் நடுக்கமுற்று அந்நதிக்கரையைத் தாண்டி அக்கரைசெல்லமுயன்று தாவும்போது வேகத்தினால் வயிற்றிலிருந்த குட்டி நழுவி அந்நதிஜலத்தில்விழ மானும் உயிர் துறந்தது.

இந்த நிகழ்ச்சிகளைக்கண்ட பரதன் கருணைகூர்ந்து கெதியற்ற மான்குட்டியை எடுத்துக்கொண்டு தன்னாசிரமம்வந்து அதை மிகவும் அன்புடன்போற்றி வளர்த்து வந்தான். நாளிற்குநாள் பரதனுக்கு மான்குட்டியிடத்தில் பேரன்புவிளைந்து அதைச் சிறிதும் விட்டு நீங்கலாற்றாத நிலைமையுண்டாயிற்று.

இப்படிச் செல்லும் நாளில் இவனுக்கு மரணகாலங் கிட்டியவுடன் அந்த மான்குட்டி இவன் கண்ணெதிரிலே நிற்க அதனிடத்தில் மிக்க அன்புடையவனாய்ப் பிராணனைவிட அவ்வந்திம ஸ்மிருதி பலத்தினால் மோக்ஷத்தையடையப் பெறாதவனாய், மறுபிறவியில் மானாகவந்துபிறந்தான். அப்பிறவியில்பூர்வஜன்மத்தின்யோகாப்யாஸ மஹிமையினால் முன்ஜன்மத்தில் தன்னுடைய செய்கையனைத்தையும் நினைத்துப் பரிதபித்து அந்நபானாதிகளில் விருப்பற்றுக் காலத்தைப்போக்கவே சிலநாளில் மான் ஜன்மங்கழிந்து உத்தமோத்தமமான பிராம்மண குலத்தில் பிறந்தனர். தம் பூர்வஜன்மத்தின் செய்கையனைத்தையும் நினைத்துச் சிறந்த ஜ்ஞானமுடையவராய் இம்மை மறுமை இன்பங்களில் விருப்பற்று யாகாதிகிரியைகளிலும் வைராக்யமுடையவராய் வேதங்களை ஓதாமலும் தம்முடைய ஜ்ஞானாதிக்யத்தை வெளிப்படுத்தாமலும் ஜடனை (மூடனை)ப்போலிருந்தார். அதனால் இவருக்கு ஜடபரதரென்று பெயர் வழங்கலாயிற்று.

இவருடைய மஹிமையை யறியாமல் சகோதரர்களும் மற்றுமுள்ள உறவினர்களும் உபேக்ஷித்துவிட இவர் யதேச்சையாகச் சஞ்சரித்துக்கொண்டிருந்தார். இங்ஙனமிருக்கின்ற காலத்தில் ஸௌவீரராஜனுடைய சாரதி யென்பவன் காளிதேவிக்கு நரபலியிடக்கருதி எவரேனுமகப்படுவார்களோவென்று தேடிவருகின்றபொழுது இவரைக் கண்டுபிடித்துக் கூட்டிக்கொண்டுசென்று காளிதேவியின் முன்பில் நிறுத்தி வாளையுருவிக் கொலை செய்யப்புக

காளிதேவி இவருடைய மஹிமையையறிந்து மிகுந்த கோபத்துடன் பிம்பத்தினின்றும் வெளிப்பட்டுவந்து அந்தச் சாரதியைப் பிடித்துக் கிழித்துச் சின்னபின்னமாக்கி அவன் ரக்தத்தைப் பானம்பண்ணி இவரைக்கொண்டாடி அனுப்பினாள். இவர் முன்போலத் திரிந்து கொண்டிருந்தார்.

பின்பொருநாள் ஸௌவீரராஜன் கபிலமஹரிஷியிடம் தத்வார்த்தங்களைக்கேட்கவிரும்பிப் பல்லக்கேறிப் போகின்றபோது வழியிலே இவரைக்கண்டு 'இவன் பருத்திருக்கிறான்; நன்றாகச் சுமைசுமப்பான்' என்று பல்லக்கைச் சுமக்கும்படி ஏவ, இவரும் தம்பாபத்தை எவ்வாறாவது கழித்துக்கொள்ளக்கோலி அதைச் சுமந்து சென்றார். இவர் மற்றவர்களோடு சேர்ந்து விரைவாக நடவாமல் மெதுவாகச் சென்றதினால் பல்லக்கு மிகவும் ஆட்டமுற்றுத் தன்னுடம்பிற்கு வருத்தமுண்டாவதைக்கண்ட அரசன் இவரை நோக்கி 'நீ பருத்திருக்கின்றாய்; சிறிது தூரந்தான் சிவிகை தாங்கி வந்தாய்; அதற்குள் விடாய்த்துப்போனையோ' என்று சொன்னான்.

அப்பொழுது ஜடபரதர் அரசனைநோக்கி "நான் பருத்தவனுமல்லேன் உன் பல்லக்கைச்சுமக்கவுமில்லை; அதன் காரணமாக எனக்கு ஆயாசமுமில்லை; என்றார். அரசன் இவர் கூறிய உட்பொருளறியாமல் இவரை நோக்கி இந்தப்பல்லக்கு உன் தோளிலிருக்கின்றது; நீ பிரத்யக்ஷமாகப் பருத்தவனாகக் காணப்படுகிறாய்; சுமைசுமந்தால் எவருக்குத்தான் வருத்தமுண்டாகாது; இப்படியிருக்க நீ முழுப்பொய் கூறுகின்றனையே என்றான். நீ கூறியவையே வியப்பாயும் முழுப்பொய்யாயு மிருக்கின்றன; நீ பிரத்யக்ஷமாகக் காண்கின்றேனென்றனையே; அதை நீ காட்டவல்லையோ? இதுநிற்க; நிலத்தின் மீது இரண்டு பாதங்களிருக்கின்றன; அவற்றின்மேல் கணைக்கால்களிருக்கின்றன; அவற்றின்மேல் முழந்தாளும், தொடைகளுமிருக்கின்றன; அவற்றை யாதாரமாகப்பற்றி நிற்கிறது வயிறு; மார்பு கை தோள்கள் என்ற இவை எல்லாம் வயிற்றின் மேலிருக்கின்றன; அந்தத் தோள்களைப்பற்றியிருக்கிறது சிவிகை; இப்படியிருக்க எனக்குப் பாரம் எதனாலேயுண்டாயிற்று?

இந்தச் சிவிகையில் நீ என்று உன்னால் நினைக்கப்பட்ட சரீரமிருக்கிறது; அந்தத் தேகத்தில் நீ யிருக்கிறாய்; அப்படியே இந்தத் தேகத்தில் நானிருக்கிறேன். தேகம் பிரகிருதி கார்யமான பிருதிவி

முதலான பூதங்களாலுண்டாக்கப்பட்டது; விகாரமுடையது; நாசமுடையது. ஆத்மா, தேகம் இந்திரியம் மனம் பிராணன் புத்தி என்ற இவற்றைக்காட்டிலும் வேறுபட்டவனாய் அணுவாய், ஞானானந்தவடிவினனாய், நித்யனாய், வளர்தல் தேய்தல் முதலிய விகாரமற்றவனாய், என்றும் ஒருபடிப்பட்டவனாய், ஈசுவரனுக்கு அடிமையாயிருப்பவனாவான். ஆதலால் நான் பாரத்தைச் சுமப்பதென்பதோன்றுண்டோ? இந்தச் சிவிகை எதனாலுண்டாக்கப்பட்டதோ அதனாலேதான் இந்த உடம்புமுண்டாக்கப்பட்டது. இங்ஙனமிருக்கின்ற இவ்வுடம்பில் உனக்கும் எனக்கும் மற்றவர்கட்கும் மமத்துவம் (எனது என்கிற அபிமானம்) ஆரோபிக்கப்படுகிறது; என்றுரைத்தார்.

இதுகேட்டவுடன் அரசன் திடுக்கிட்டுச் சிவிகையினின்றும் திடீரென்று குதித்து ஜடபரதருடைய பாதாரவிந்தங்களை வணங்கி நின்று தேவரீர் அளவிடமுடியாத மகிமையுடையீராக விளங்குகின்றீர்; உமதுமகிமையை வெளிப்படுத்தாமல் ஜடரைப்போலக் காணப்படுகிறீராதலால் அடியேன் அறியாது தேவரீர் விஷயத்தில் அபசாரப்பட்டுவிட்டேன்; க்ஷமித்தருளவேண்டும். தேவரீர் யாரென்பதுந் தெரியவில்லை; என்னகாரணத்தினால் யாது பயனைக்கருதி இங்கெழுந்தருளினீர்? இவற்றையெல்லாம் அடியேனுக் குரைத்தருளவேண்டுமென்றான்.

அப்பொழுது ஜடபரதர் அரசனைநோக்கி அரசனே! நீயார்? என்று வினவினையே அதற்கு நான் இன்னான் என்று விடை கொடுக்கக்கூடாததாயிருக்கிறது. எப்பயனைநோக்கி எதனால் இங்கே வந்தாய் என்பதற்கு விசேஷித்து விடையளிக்கவேண்டுவதில்லை. எங்கும் வருதற்குப் பயன் அநுபவமே. இந்தச் சுகதுக்காநுபவங்கள் புண்ணியபாபங்களினாலே உண்டானவைகளாய் இடத்தையுங் காலத்தையும்பற்றியிருப்பதினால் பிராணிகள் தம் கர்மாநுபவத்திற்கு உரியதேசகாலங்களிலே தேகாதிகளைப் பெறுகின்றன; என்றார். அப்பொழுது அரசன் ஸ்வாமி! ஆத்மா இல்லாதவஸ்துவென்பதில்லை. உள்ள வஸ்து தானே. அப்படியிருக்க இந்த நான் என்ற சொல்லை ஆத்மாவின்மேல் பிரயோகிப்பது குற்றமன்றே. தேவரீர்

இப்பொழுது நான் இன்னுனென்று ஆத்மாவைக்குறித்துச் சொல்லக்கூடாதென்றீரே. அஃதெப்படி? இதுவிஷயத்தை அடியேனுக்கு விளக்கியருளவேண்டுமென்றான்.

ஜடபாதர் அரசனே! ஆத்மாவைக்குறித்து நான் என்ற சொல்லை பிரயோகிப்பதுகுற்றமன்று. மயக்கவுணர்வால் நான் என்ற சொல் தேகாதிகளைக் குறிப்பிடுவதாகவுந் தோற்றும். நீ, நாக்கும் உதடும் பல்லும் தாலுக்களும் நான் என்று சொல்லுகின்றன என்று கருதுகின்றனையோ அவை பலவும் கருவிகளேயன்றிக் கர்த்தாவான ஆத்மாவாகமாட்டா. இந்த கருவிகளைக்கொண்டு வாக்கு என்கிற இந்திரியமே நான் என்கிறதென்பையோ அங்ஙனங்கொள்ளும் பக்ஷத்தில் நீ பருத்திருக்கிறாய் என்பது எப்படிப் பொருந்தும்? மேலும் 'என்னுடைய வாக்கு என்று சொல்லப்படுகிற வியவகாரத்தை நோக்குமிடத்தில் வாக்கு உடைமைப்பொருளாகக் காணப்படுகிறதல்லவா. இதுபோல மற்ற விந்திரியங்களும் ஆத்மாவாகமாட்டா. அநேக அவயவங்களோடுங்கூடிய தேகமும் ஆத்மாவாகமாட்டாது. 'உறங்குவதற்குமுன் இவையெல்லாமறிந்திருந்த நான் உறங்கும்போது என்னுடம்புமுட்படவறிந்திலேன்' என்ற உணர்ச்சியாலும், 'நான் ஜன்மாந்திரத்திற்செய்த பலமிது' என்ற வியவஹாரத்தாலும் ஜன்ம மரணமில்லாமல் எப்பொழுதும் ஒருபடிப் பட்டிருப்பவனொருவனுளன் என்பது பெறப்படும். இந்த ஆத்மாவின் இயல்பைக்குறித்து முன்னர் கூறியுள்ளேன். இதுநிற்க;

எல்லாதேகங்களிலுள்ள ஆத்மாக்களும் ஜ்ஞாநாநந்தவடிவினையுடையவைகளேயாம். ஆனபடியால் தேகதர்மங்களான ஜாதிகளையிட்டுப் பேதப்படுத்திச் சொல்லக்கூடாமலிருக்க நீயார்? என்கிற கேள்வியும், நான் இன்னான் என்கிற விடையும் பொருத்தமுடையனவாகா. உடம்பு அநித்யப்பொருளாதலால் ராஜாவாகிய நீயும், சிவிகை சுமக்கிற நாங்களும், உன்சேவகர்களும் ஸத்தான பொருள்களாகா. எவ்வாறெனின்; முன்பு மரமாயிருந்தது வெட்டப்பட்டுக் கட்டையாயிற்று. பின்பு நீ ஏறியிருக்கிற பல்லக்காயிற்று. இந்த நிலைமையில் இதற்கு விருக்ஷமென்கிற பெயரும், கட்டையென்கிற பெயரும் எங்கேயிருக்கிறது? இப்பொழுது உன்னை 'மஹாராஜா

விருக்ஷத்தின் மீதிருக்கிறார்'. என்று சொல்வார்களா? சிவிகையின் மேலிருக்கிறார் என்றல்லவோ சொல்வார்கள். ஆராய்ந்து பார்த்தால் சிவிகை என்பது ஒருவகை வளைப்புப் பெற்றிருக்கிற கட்டைகளின் கூட்டமேயல்லது வேறன்று. இந்தக் கட்டைகளின் இணைப்பைப் பிரித்துவிட்டுப் பல்லக்கு எங்கேயிருக்கிறதென்று தேடிப்பார்ப்பாய். இந்த நியாயத்தை உன்னிடத்திலும், என்னிடத்திலும் வைத்துப் பார்த்தால் நீ இத்தன்மையினை நான் இத்தன்மையினன் என்பது தெரியும். லோகவ்யவஹாரம் எங்ஙனமிருக்கிறதென்றால் கர்மவசத்தினாலுண்டாகின்ற தேகங்களிலே புருஷனென்றும், ஸ்திரீ என்றும், மாடென்றும், யானையென்றும், பக்ஷியென்றும், மரம் என்றும் பெயர் வழங்கப்படுகின்றன. நீ, நான் என்கிற சொற்களின் முக்யப்பொருளான ஆத்மஸ்வரூபமானது ஆணுமன்று பெண்ணுமன்று தேவனுமன்று மனிதனுமன்று மிருகமுமன்று பக்ஷியாங்களுமன்று. இந்த பேதங்களெல்லாம் கருமத்தினால் வந்த சரீர பேதங்களேயாம். இப்பேதப்பொருள்களெல்லாம் உற்பத்தியுடையனவாதலால் ஸத்தான பொருள்களாகமாட்டா. எது திரிபுடைமையால் வெவ்வேறு பெயரடையாமல் ஒரு தன்மையதாயிருக்குமோ அதுவே ஸத்துடைப்பொருளாம். அரசனே! அது எது என்று ஆலோசித்துப்பார்ப்பாய். நீ உலகத்தாருக்கு அரசன், தகப்பனுக்கு மகன், சத்துருவுக்குப் பகைவன், மனைவிக்குப் புருஷன், மகனுக்குப் பிதா, இப்படியிருக்க உன்னை யாரென்று சொல்வேன்? இவ்வுடம்புக்கு நீ யார்? உனக்கு இவ்வுடம்பு என்ன; எல்லா அவயவங்கட்கும் வேறாய் நிற்கின்ற நீ நன்றாய் ஆராய்ந்து 'நான் யார்' என்று அறிந்துகொள் என்றுரைத்தார். இதுகேட்ட அரசன் தத்வஜ்ஞானமுடையவனாய் விளங்கினான்.

மதிப்புரை.

அறிவு விளக்கம்:— இது, உடுமலைப்பேட்டை ஸ்ரீமாந் அ. கிருஷ்ணஸாமிப்பிள்ளையவர்கள் பத்திராதிபராயிருந்து வெளியிட்டு வரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. பரோபகாரமாக உழைக்கும் பத்திரிகைகளில் இதுவுமொன்றாகும். இதுதன் பெயருக்கேற்றபடி மாந்தருக்கு அறிவொழுக்க முதலியவற்றைப் போதிக்கும் பெற்றியதாய் விளங்குகிறது. இதற்கு வருஷ சந்தா ஆறணாவேயாம். இவ்வளவு குறைந்த ஊதியத்தைப்பெற்று உபகரிக்கும் பத்திரிகை இதுகாறும் வெளியாகவில்லை. ஆகலால் இதை எல்லோரும் ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டவராவார்கள். வேண்டுவோர் மேற்கண்ட பத்திராதிபருக்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

நன்கொடை.

நமது திவாகரம் நீடூழிகாலம் நிலைபெற்று விளங்க பலதார்மிகர்கள் ஸம்ரக்ஷகராகவும், போஷகராகவும், ஜீவித சந்தாதாரர்களாகவும் சேர்ந்து பொருளுதவிபுரிந்து வருகிறார்களென்பதை யாவருமறிவர். இது நிற்க; 'குறிப்பறிந்தீகலேகொடை' என்ற முறைக்கிணங்க ரங்கூன் ஸ்ரீமாந், G. பார்த்தசாரதிப்பிள்ளை என்பவர் ஜீவித சந்தாதாரராகச் சேர்ந்து 25 ரூபாபொருளுதவி புரிந்துள்ளார். இவர் "பொருந்திய தேசும் பொறையும் திறலும் நல்ல, திருந்திய ஞானமும் செல்வமும்" பெற்று விளங்க எல்லாம்வல்ல எம்பெருமானை இறைஞ்சுவோமாக.

ப. அ.